





## கழக அரசின் திட்டங்களால் பயனடைந்த ஒருவராவது அனைத்து வீடுகளிலும் நிச்சயமாக இருப்பார்:

# கழக உடன்பிறப்புகள் மக்களிடம் சென்று தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொள்ளுங்கள்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழக நலத்திட்ட விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை,அக்.18 -**

**சென்னை பாரிமுனையில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக நிர்வாகிகள் பி.எல்.ஏ- 2, பி.எல்.சி. நிர்வாகிகள் என 2,500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**அப்போது அவர், ``திராவிட மாடல் அரசின் நலத் திட்டங்களின் மூலம் பயனடைந்த ஒருவராவது அனைத்து வீடுகளிலும் நிச்சயமாக இருப்பார். அது பற்றி கழக உடன்பிறப்புகள் மக்களிடம் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொள்ளுங்கள் என்று அவர் குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பாக நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இந்த நிகழ்ச்சிக்கு வந்து கொண்டிருக்கும் போதுதான் யோசித்துப் பார்த்தேன். நான் என்றைக்கு இந்த நிகழ்ச்சிக்காக சேகர் பாபு அண்ணனிடம் தேதி கொடுத்தேன். இப்போதுதான் கொஞ்சம் நாட்களுக்கு முன்பு வந்துவிட்டு சென்ற மாதிரி இருந்தது. இப்போது திரும்பி வந்திருக்கிறேனே? இது என்ன நினைவா? இல்லை கனவா? இல்லை உண்மையா. இப்படி என்னுடைய கனவிலும் வந்து தேதி வாங்கி கொண்டிருக்கிறார் அண்ணன் சேகர்பாபு அவர்கள். அப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது.

### அன்புக் கட்டளை

கடந்தமுறை வரும்போது இதே மாதிரி ஒரு நலத்திட்ட உதவி நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். சரியாக 14, 15 நாட்கள் இருக்கும் என்று நம்புகிறேன். அந்த நிகழ்ச்சி மேடையிலேயே என்னிடம் தேதி கேட்ககூட இல்லை. அவரே முடிவு எடுத்து இந்த நிகழ்ச்சி நடத்த போகிறேன். அதற்கு நீங்கள் வரவேண்டும் என்று அப்பொழுதே என்னிடத்திலே ஒரு அன்புக் கட்டளையிட்டு, இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்து வந்திருக்கிறார்.

அதிலும் இது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல. கழகத்தின் நிர்வாகிகள் கழகத்தின் 2026 தேர்தல் வெற்றிக்காக உழைக்கத் தயாராக இருக்கக்கூடிய செயல் வீரர்கள் உங்களை எல்லாம் சந்திக்கின்ற நிகழ்ச்சி. மாநாடு போல நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. கடந்த ஒரு மாத காலமாக தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பல்வேறு மாவட்டங்களுக்கு ஒவ்வொரு நாள் ஒரு தொகுதிக்கு தலைவரின் கட்டளையின் பேரில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று, அங்கு இருக்கக்கூடிய தொகுதியின் நிர்வாகிகள் அத்தனைப்பேரையும் சந்தித்து, அவங்களுடன் ஆலோசனை செய்து, என் தொடர் சுற்றுப்பயணத்தைச் செய்து கொண்டிருக்கிறேன்.

என்னதான் பகல் முழுவதும் ஊர் சுற்றினாலும், இரவு தூங்குவதற்கு வீட்டிற்கு வந்துதான் ஆக வேண்டும். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்றாலும் இது என்னுடைய தாய் வீடு இந்த சென்னை கிழக்கு மாவட்டம். அந்த உரிமையோடுதான் சேகர் பாபு அவர்கள் என்னை அழைத்திருக்கிறார்கள். அந்த உரிமையோடு உங்களை எல்லாம் சந்திக்க வருகை தந்துள்ளேன்.

பல்வேறு நிகழ்ச்சிகள். ரம்ஜான் திருவிழா, கிறிஸ்துமஸ் தினவிழா, கலைஞர் பிறந்த நாள் விழா, தலைவரின் பிறந்த நாள் விழா, என் பிறந்த நாள் விழா, எனக்கு தெரிந்து சேகர் பாபு அண்ணன் அவரின் பிறந்த நாளுக்கு மட்டும்தான் நிகழ்ச்சிகள் நடத்துவதில்லை என்று நினைக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், மேடைக்கு வந்தவுடன் பல பேர் பூங்கொத்து, புத்தகங்கள் கொடுத்து சிலருக்கு என்ன வாழ்த்து சொல்வது என்றே தெரியவில்லை. தீபாவளி திருநாள் என்று சொல்லலாமா, வேண்டாமா, சொன்னால் இவர் ஏதாவது கோபித்துக் கொள்வாரா என்று நினைத்துக்கொண்டு வாழ்த்துகள், வாழ்த்துகள் என்று சொன்னார்கள்.

### நிகழ்ச்சிகள்— நலத்திட்டங்கள்

நான் சொல்கிறேன், நம்பிக்கை உள்ளவர்களுக்கு தீபஒளி திருநாள் வாழ்த்துகள். ஆனால், ஏதோ பண்டிகை காலம் மட்டும் நிகழ்ச்சி நடத்துபவர் கிடையாது அண்ணன் சேகர் பாபு அவர்கள். வருடம் முழுக்க 365 நாளும் நிகழ்ச்சிகள் நடத்தி, நலத் திட்டங்களைக் கொடுப்பவர்தான் அண்ணன் சேகர் பாபு அவர்கள். நேற்று நம் கழகத் தலைவர் அவர்களை வைத்து கொளத்தூர் தொகுதியில் சிறப்பான ஒரு நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார். இன்றைக்கு என்னை அழைத்து கொளத்தூர் தவிர, ஐந்து தொகுதிகளுக்கும் இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்.

இப்படி என்னுடைய தேதிகளை அட்வான்ஸ் புக்கிங் செய்து நிகழ்ச்சிகளை நடத்துவதில் அண்ணன் சேகர் பாபு அவர்களை அடித்து கொள்வதற்கு ஆளே கிடையாது. பொதுவாகவே அவர் நிகழ்ச்சிகளை அடித்துக்கொள்ள ஆள் கிடையாது. கலைஞர் அவர்கள் நம் தலைவரைப் பற்றி பேசும் போது, பாராட்டி பேசுவார். உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்றால் அது ஸ்டாலின்தான் என்று பாராட்டுவார். அப்படிப்பட்ட உழைக்கின்ற உழைப்பிற்கே பெயர்போன நம் தலைவர் இடத்தில் நீங்கள் வெறும் சேகர் பாபு கிடையாது, நீங்கள் செயல்பாபு என்ற உழைப்பை கொடுப்பவர்தான் அண்ணன் சேகர் பாபு அவர்கள். அவருக்கு நிகராக இங்கே உழைப்பதற்கு யாரும் கிடையாது.



கடவுளை நம்பிக்கை இருப்பவர்கள் சொல்வார்கள். கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்று. அதேமாதிரிதான் எங்களுக்கு அண்ணன் சேகர் பாபு அவர்கள். தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார். இப்படி உழைப்புக்காக பெயர் எடுத்த அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் இன்றைக்கு மட்டும் மூன்று நிகழ்ச்சிகள். அதில் முதல் நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. இதன்பிறகு இரண்டு நிகழ்ச்சிகள். அதை முடித்துவிட்டு, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதிக்கு நான் செல்ல வேண்டும். அங்கே கிட்டத்தட்ட ஏழு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

### உடன்பிறப்புகளே காரணம்

பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் அண்ணா சொல்வார். இன்றைக்கு ஏழ்மையே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்று தன் மாவட்டம் முழுவதும் பல்வேறு நலத்திட்டங்களை, அண்ணன் சேகர் பாபு அவர்கள் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். குறிப்பாக 2021 சட்டமன்ற தேர்தலின் போது உங்களின் உழைப்பால் நம் தலைவர் அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலமைச்சராக வெற்றிபெற்று அந்த பொறுப்பில் அமர்ந்தார். அந்தத் தேர்தல் வெற்றிக்கு முழுகாரணம் இங்கு வந்திருக்கக்கூடிய கழகத்திற்காக உழைக்கக்கூடிய உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான்.

உங்கள் உழைப்பின் காரணமாகதான் நம்முடைய தலைவர் வெற்றிபெற்று இன்றைக்கு இந்தியாவே திரும்பி பார்க்கின்ற அளவில் பல்வேறு நலத் திட்டங்களை இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களுக்காக கொடுத்து வருகிறார். அதில் சில திட்டங்களை மட்டும் இன்றைக்கு உங்களிடம் நினைவுபடுத்த விரும்புகிறேன். முதலமைச்சராக பொறுப்பேற்று தலைவர் அவர்கள் முதல் நாளன்று ஐந்து கையெழுத்து போட்டார். அதில் முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து திட்டத்தை அறிவித்து செயல்படுத்தினார். அந்த மகளிர் விடியல் பேருந்து திட்டத்தின் காரணமாக, தமிழ்நாடு முழுவதும் இந்த நான்கரை வருடத்தில் 800 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

### காலை உணவுத் திட்டம்

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டும், பசியோடு வரக்கூடாது என்று உருவாக்கப்பட்ட திட்டம் முதலமைச்சரின் காலை உணவு திட்டம். இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நம் மாநிலத்தில் தலைவர் அவர்கள் அறிவித்தார். இன்றைக்கு முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சர் பகவான் சிங் அவர்கள் வந்து பாராட்டினார். ``தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, இந்த முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் மிக மிக சிறந்த திட்டம். இது அடுத்த ஆண்டிலிருந்து எங்களுடைய மாநிலமான பஞ்சாப் மாநிலத்தில் நான் அறிமுகப்படுத்த போகிறேன்" என்று பஞ்சாப் மாநில முதலமைச்சர் தமிழ்நாட்டுக்கு வந்து பாராட்டிவிட்டுச் சென்றார்.

மாணவர்கள் பள்ளி கல்வி படித்தால் மட்டும் போதாது, உயர்கல்வி படிக்க வேண்டும் என்று மாணவிகளுக்கு புதுமைப்பெண், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தை தலைவர் அவர்கள் அறிவித்தார். அரசு பள்ளியில் படித்து, உயர்கல்வி படிக்க எந்தக் கல்லூரிக்குச் சென்று சேர்ந்து படித்தாலும அவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் வழங்கப்படுகிறது. மாணவனாக இருந்தால் தமிழ் புதல்வன் திட்டம், மாணவியாக இருந்தால் புதுமை பெண் திட்டம்.

இந்தத் திட்டத்தை தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் பாராட்டிப் பேசினார். ``தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, இது மிகச் சிறந்த திட்டம் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து எங்கள் தெலங்கானா மாநிலத்திலும் இந்த திட்டத்தை தொடர போகிறேன் என்று தெலுங்கானா முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். மற்ற மாநில முதலமைச்சர் எல்லாம் வந்து பாராட்டக்கூடிய அளவில், மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக நம்முடைய தமிழ்நாடு இன்றைக்கு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருகின்ற ஒவ்வொரு திட்டமும் சாட்சி.

மகளிர் உரிமைத் தொகை திட்டம். மகளிருக்கு மாதந்தோறும் 1,000 தருகிறேன் என்று நம் தலைவர் சொன்னார். நாம் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் பொழுது கடும் நிதி நெருக்கடி, கொரோனா காலம் இரண்டாவது ஊரடங்கு காலம். இருந்தாலும் நம்முடைய தலைவர் அவர்கள் 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி, பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் அந்தத் திட்டத்தை செயல்படுத்தினார். கிட்டத்தட்ட ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் இன்றைக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளார்கள்.

### மிகப்பெரிய வரவேற்பு

இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்ட திட்டம் இன்றைக்கு 2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ஆம் தேதியுடன் 26 மாதங்கள் ஆகிவிட்டன. நேற்று அந்த பயனாளிகளுக்கெல்லாம் அவர்களின் வங்கிக் கணக்கில் 1,000 ரூபாய் சென்றடைந்திருக்கும். ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு இதுவரைக்கும் 26,000 ரூபாயை நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சில இடங்களில் விடுபட்டு போய்விட்டன என்று புகார் வந்தது. நான், அண்ணன் சேகர் பாபு உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் எல்லாம் தலைவரிடம் சில இடங்களில் மகளிர் அதை ஒரு குறையாக சொல்கிறார்கள் என்று சொன்னவுடன், தலைவர் அவர்கள் அதில் சில விதிமுறைகளைத் தளர்த்திவிட்டார்கள். `உங்களுடன் ஸ்டாலின்' என்ற முகாம் உங்கள் பகுதியில் நடந்திருக்கும். மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது. கிட்டத்தட்ட 99 சதவிகித முகாம்களை முடித்துவிட்டோம்.

இன்றைக்கு காலையில் சட்டமன்றத்தில் முதலமைச்சரின் அறிவுறுத்தலின் படி அறிவித்தேன். வருகின்ற டிசம்பர் 15-ஆம் தேதியிலிருந்து அந்த விடுபட்டு போன தகுதியுள்ள மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்து செய்வதனால்தான் இன்றைக்கு தமிழ்நாடு இரண்டு இலக்குப் பொருளாதார வளர்ச்சியுடன் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நம் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. இப்படி எல்லா வகையிலும் நம்முடைய முதலமைச்சரின் உழைப்பால், திட்டங்களால் இன்றைக்கு தமிழ்நாடு சிறந்து விளங்குவதால், சாதித்து வருவதால் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கும், அவங்களின் அடிமைக் கூட்டத்துக்கும் வயிற்றெரிச்சல். நாம் எவ்வளவு தடங்கல்கள் கொடுத்தாலும், முதலமைச்சர் சிறப்பாக செயல்படுகிறாரே? தமிழ்நாட்டு மக்கள் இவ்வளவு விழிப்பு உணர்வோடு இருக்கிறார்களே? தொடர்ந்து முதலமைச்சர் தலைமையிலான அந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்து அவங்களுக்கு வெற்றி மேல் வெற்றியாக கொடுத்துக் கொண்டே இருக்கிறார்களே தமிழ்நாட்டு மக்கள் என்று வயிற்றெரிச்சல் அவர்களுக்கு இருக்கிறது..

### புதிய கல்விக் கொள்கை

இதற்கு எப்படி இடையூறு செய்யலாம், எப்படி தடங்கல்கள் ஏற்படுத்தலாம் என்று பல்வேறு வழியில் முயற்சி செய்துகொண்டே இருக்கிறார்கள். மொழி உரிமையைப் பறிக்க முயற்சி செய்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். இந்த புதிய கல்விக் கொள்கைத் திட்டத்தை நிறைவேற்றினால்தான் தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய 2,500 கோடியை தருவேன் என்று ஒன்றிய அமைச்சர் மிரட்டினார். நம் தலைவர் சொன்னார். நீங்கள் புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் குறுக்குவழியில் மீண்டும் இந்தித் திணிப்பை தமிழ்நாட்டுக்குள் திணிக்கப் பார்க்கிறீர்கள். சமஸ்கிருதத்தை எப்படியாவது தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்கப் பார்க்கிறீர்கள். குலக்கல்வி திட்டத்தை மீண்டும் தமிழ்நாட்டுக்குள் கொண்டு வர பார்க்கிறீர்கள். 2,500 கோடி இல்லை, நீங்கள் பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும், எப்போதும் தமிழ்நாட்டுக்குள் புதிய கல்விக் கொள்கையை நான் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லி சட்ட ரீதியாக போராட்டம் நடத்தி, இன்றைக்கு அந்த 2,500 கோடியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாங்கி இருக்கிறார்கள்.

நிதி உரிமை, மொழி உரிமை, கல்வி உரிமை, மாநில உரிமைகளை எல்லாம் பறிக்க முயற்சி செய்கிறார்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். ஏற்கனவே ஜெயலலிதா அம்மையார் இறந்த பிறகு, தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் ஒன்றிய பா.ஜ.க-வுக்கு அடகு வைத்தவர்கள்தான் இந்த அடிமைக் கூட்டம்.

மீண்டும் அ.தி.மு.க-வும் - பா.ஜ.க-வும் இன்றைக்கு கூட்டணி வைத்திருக்கிறது. சென்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க எடுத்த நிலைமை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் இனிமேல் எந்தக் காலத்திலும் பா.ஜ.க-வுடன் கூட்டணி கிடையாது, தேர்தல் தோல்விக்கு மிக மிக முக்கிய காரணமே பா.ஜ.க.-வுடன் கூட்டணி வைத்ததுதான் என்று சொன்னவர்தான், இன்றைக்கு நான்கு கார்கள் மாறிச் சென்று திருட்டுத்தனமாக டெல்லிக்குச் சென்று கூட்டணி வைத்துவிட்டு வந்துள்ளார். அதுவும் சும்மாவா சென்றார். ஊரே பார்த்து சிரித்தது. இன்றைக்கு மக்கள் அவரைக் கூப்பிடுவது எடப்பாடி பழனிசாமி என்று கிடையாது. `முகமூடி' பழனிசாமி என்றுதான் கூப்பிடுகிறார்கள். தலையில் ஒரு துண்டைப் போட்டுக்கொண்டு, முகத்தை மறைத்துக்கொண்டு திருட்டுத்தனமாக வந்தவர்தான் `முகமூடி' பழனிசாமி அவர்கள். அதைகூட நாம் கண்டுபிடிக்கவில்லை. பத்திரிகைக்காரர்தான் கண்டுபிடித்தார்.

பத்திரிக்கையாளர்கள் கேட்டார்கள். உள்துறை அமைச்சரைப் பார்த்துவிட்டு, ஏன் முகத்தை மூடிக்கொண்டு வந்தீர்கள், அப்படி உள்ளே என்ன நடந்தது என்று கேட்டார்கள். அதற்கு அவர், `இல்லை முகம் வியர்த்தது, அதனால் முகத்தை மூடிக்கொண்டு வந்தேன்' என்று சொன்னார். அவருக்கு முகம் மட்டும் வியர்க்கவில்லை. கண்ணும் வியர்த்திருக்கிறது. உள்ளே என்ன நடந்தது என்று நமக்குத் தெரியாது. அவருக்கு மட்டும்தான் வெளிச்சம். இப்படி ஒரு அடிமைக் கூட்டத்தை ஒன்றிய பா.ஜ.க அரசு தயார் செய்து, தங்களின் அடிமையாக சேர்த்து வைத்திருக்கிறது.

### புது அடிமைகள்

பழைய அடிமைகள் பற்றவில்லை என்று இன்றைக்கு புது அடிமைகளையும் வலைவீசி தேடிக் கொண்டு இருக்கிறார்கள். கண்டிப்பாக புது அடிமைகள் விரைவிலே, ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு மாட்டுவார்கள். எத்தனை அடிமைகள் ஒன்று கூடி வந்தாலும் நம்முடைய கருப்பு-சிவப்பு துண்டு போட்ட திராவிட முன்னேற்ற கழகத் தொண்டன் இருக்கிறவரைக்கும் பாசிச அரசை, அடிமை அரசை, அடிமை கட்சியை நிச்சயம் தமிழ்நாட்டுக்குள் கால் வைக்ககூட அனுமதிக்க மாட்டார்கள். அதற்கு இந்த நாளில் நாம் அத்தனை பேரும் உறுதிமொழி ஏற்க வேண்டும்.

நம்மிடம் இன்னும் ஐந்து மாதங்கள்தான் இருக்கின்றன. அடுத்த ஐந்து மாதம் மிக மிக முக்கியம். வந்திருக்கக்கூடிய கழக நிர்வாகிகள், கள வீரர்கள் நீங்கள் அத்தனை பேரும் அடுத்த ஐந்து மாதம் மக்களுடன் நெருங்கிய, நேரடி தொடர்பில் இருக்க வேண்டும். அரசின் திட்டங்களை, தலைவரின் சாதனைகளை தைரியமாக நீங்கள் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். இந்த நான்கரை வருடத்தில், நம்முடைய தலைவர் கொண்டு வந்த ஏதாவது ஒரு திட்டத்தில் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைத்து வீடுகளிலும் யாராவது ஒரு பயனாளியாவது நிச்சயமாக இருப்பார்கள். அவர்களிடம் தொடர்ந்து நீங்கள் இந்தப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

### 200–க்கும் அதிகமான தொகுதிகள்

நம் தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்திருக்கிறார்கள். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்ற இலக்கை கொடுத்திருக்கிறார்கள். இலக்கு 200. 200 இல்லை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் வெற்றிபெற்று காட்ட வேண்டும். மீண்டும் அடிமை ஆட்சியை தமிழ்நாட்டுக்குள் வராமல் தடுக்கவேண்டிய அந்தக் கடமை தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களை விட அதிகமான கடமை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களான உங்கள் கைகளில்தான் இருக்கிறது. இதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.

தலைவர் அவர்கள் 200 என்று இலக்கை நிர்ணயித்துள்ளார்கள். இந்த மாவட்டத்தில் ஆறு தொகுதி. ஆறுக்கு ஆறு அண்ணன் சேகர் பாபு அவர்கள் நிச்சயம் அடிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை களத்தில் இறங்கி நிச்சயம் நீங்கள் செய்து காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நான் உங்களிடம் வைக்கக்கூடிய ஒரு கோரிக்கை. இந்த ஆறு தொகுதிகளில் அதிகமான வாக்கு வித்தியாசம் எந்தத் தொகுதி என்ற போட்டிதான் நமக்குள் இருக்க வேண்டும். அந்தப் போட்டி அடுத்த ஐந்து மாதங்கள் நமக்குள் இருக்க வேண்டும். தேர்தல் நாள்வரைக்கும் மக்களைச் சந்தித்து மக்களை கையோடு அழைத்து சென்று, வாக்குசாவடியில் உதய சூரியன் சின்னத்தில் வாக்களிக்க யார் யார் பொறுப்பேற்று கொள்கிறோம் என்று இருக்கவேண்டும். அதுமட்டுமல்ல, தேர்தலுடன் முடியாது. வாக்கு எண்ணிக்கை முடிகிறவரைக்கும் வெற்றி அறிவிப்பு ஒப்புதல் பெறுகிற வரைக்கும் தலைவர் யாரை வேட்பாளராக அறிவிக்கிறார்களோ அவர்கள் வெற்றியை உறுதி செய்கிறவரைக்கும் களத்தில் நின்று அந்த வெற்றியை உறுதி செய்யக்கூடிய பொறுப்பு உங்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது என்று கூறிக் கொள்கிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து, வந்திருக்கக்கூடிய அத்தனைபேரும் இதே எழுச்சியுடன் அடுத்த ஐந்து மாதங்கள் நீங்கள் களத்தில் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்றும், அண்ணன் சேகர் பாபு அவர்களின் வெற்றிக்கு நீங்கள் துணை நிற்க வேண்டும் என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, பரிதி இளம்சுருதி, மருத்துவர் ஷேக் அப்துல்லா, வழக்கறிஞர் சந்துரு, சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் நரேந்திரன், நாகலிங்கம், தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, முனியாண்டி, மருத்துவர் யாழினி, பகுதி கழகச் செயலாளர்கள் ராஜசேகர், முரளி, நாகராஜ், டி.எஸ்.பி.இராஜகோபால், ஐ.சி.எஃப்.முரளி, நாகராஜ், வாசு, கூ.பி.ஜெயின், தமிழ்வேந்தன், சாமிகண்ணு, சோ.வேலு, சுதாகர், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், தேவ ஜவகர், புனிதவதி எத்திராசன், தேவன், விஜயகுமார், ஆசாத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நாதன், மகேஷ்குமார், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் டாக்டர் சாந்தகுமார், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் ஸ்ரீராமலு, பி.கே.மூர்த்தி, சரிதா மகேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் வினோத், பாலமுருகன், ஜி.ஜே.பிரபு, தனசேகர், ஜெகதீஷ், சங்கர் நானா, பொதுக்குழு உறுப்பினர்கள் கலைச்செல்வி, இப்ராஹிம் கனி, போஸ், வட்டக் கழகச் செயலாளர்கள் ராஜா, பரத்குமார், பரிமளம் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்